**செய்தி வெளியீடு எண்: 518** **நாள்: 09.03.2024**

**செய்தி வெளியீடு**

2024–ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத் தேர்தல் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகம் மூலம் பல்வேறு விழிப்புணர்வு பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2024–நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் வாக்களிக்க செய்கின்ற வகையில் பத்திரிக்கை, தொலைக்காட்சி செய்தி ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் விளம்பரங்கள் செய்தல், அரசுத்துறை நிறுவனங்கள், பள்ளி, கல்வி நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புகள் போன்றவை மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல் போன்ற நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக "100 சதவீத வாக்களிப்பை உறுதி செய்வோம்" விழிப்புணர்வு நடைப்பயணம் இன்று (09/03/2024) காலை 8.30 மணி முதல் 9.00 மணி வரை சென்னையில் நடைபெற்றது. சென்னை, பெசன்ட்நகர், எலியட்ஸ் கடற்கரைப் பகுதியில் நடைபெற்ற இந்த நடைப்பயணத்தில் சென்னையிலுள்ள பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த இளைஞர் ரெட்கிராஸ் மாணவ – மாணவியர்கள் 500–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இப்பேரணியானது தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் நியூஸ் 7 – தொலைக்காட்சியுடன் இணைந்து நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையாளர் டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் நடைப்பயணத்தை கொடியசைத்துத் துவக்கி வைத்தார். பின்னர் சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையாளர் டாக்டர். ஜெ. ராதா கிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வாக்காளர் உறுதி மொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டல துணை ஆணையர் திரு. அமித் இ.ஆ.ப., அவர்கள், இணை தலைமை தேர்தல் அலுவலர் திரு. அரவிந்தன் அவர்கள், நியூஸ் 7 – தொலைக்காட்சி தலைமை நிர்வாக ஆசிரியர் திரு. தியாகச்செம்மல் அவர்கள், சென்னை மாவட்ட இளைஞர் ரெட்கிராஸ் ஒருங்கிணைப்பாளர் டாக்டர்.சுலைமான் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும்**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in